செய்தி வெளியீடு எண்: 226 /2018 நாள்: 17.04.2018

**வேலூர் மாவட்டம் ஓச்சேரி மற்றும் கே.வேலூரில் மத்திய அரசின் கிராம சுவராஜ் அபியான் இயக்க காலத்தில் மத்திய அரசின் திட்டங்களில் பொதுமக்களை இணைக்கும் சிறப்பு முகாமினை மத்திய அரசின் கண்காணிப்பு அலுவலர் திரு.ஜெயசீலன், (I.D.A.S.) அவர்கள் மற்றும் இந்திய அரசின் கால்நடைத் துறை துணை செயலாளர் திரு.தீபக்சீதி அவர்கள் துவக்கி வைத்தார்கள்!**

வேலூர் மாவட்டம் காவேரிப்பாக்கம் ஊராட்சி ஒன்றியம் ஓச்சேரி இந்தியன் வங்கி கிளையிலும் மற்றும் ஆற்காடு ஊராட்சி ஒன்றியம் கே.வேலூர் ஊராட்சி சமுதாயக் கூடத்திலும் மத்திய அரசின் கிராம சுவராஜ் அபியான் இயக்க காலத்தின் ஒரு பகுதியாக மத்திய அரசின் அனைவருக்கும் வங்கி கணக்கு, பிரதம மந்திரியின் அனைவருக்கும் ஆயுள் காப்பீடு மற்றும் விபத்து காப்பீடு திட்டத்தில் பொதுமக்களை இணைக்கும் சிறப்பு விழிப்புணர்வு முகாம் மத்திய அரசின் கண்காணிப்பு அலுவலர் திரு.ஜெயசீலன், (I.D.A.S.) அவர்களும் இந்திய அரசின் கால்நடைத் துறை துணை செயலாளர் திரு.தீபக்சீதி அவர்களும் துவக்கி வைத்து வங்கிக் கணக்கு இல்லாதோருக்கு வங்கி கணக்கு பெற விண்ணப்பங்களை வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலை வகித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் மத்திய அரசின் கண்காணிப்பு அலுவலர் திரு.ஜெயசீலன், (I.D.A.S.) அவர்கள் பேசியதாவது:

14.04.2018 முதல் 05.05.2018 வரை வேலூர் மாவட்டத்தில் 74 ஊராட்சிகளில் கிராம சுவராஜ் அபியான் இயக்கத்தில் சிறப்பு கூட்டங்கள் மற்றும் முகாம்கள் நடத்தப்பட்டு மத்திய அரசின் திட்டங்கள் அனைத்தும் நாட்டில் உள்ள கடைகோடி வீடுகளுக்கும் ஒவ்வொரு மனிதனுக்கும் கிடைத்திட வேண்டும் என்பதன் அடிப்படையில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் வேலூர் மாவட்டத்தில் உள்ள கிராமங்களில் பொதுமக்கள் அனைவரும் மத்திய அரசின் திட்டங்களில் பயன்பெருகின்றனரா என கண்காணித்து அறிக்கையினை அளித்திட மத்திய அரசு மாவட்டங்கள் தோறும் அலுவலர்களை நியமித்துள்ளது. இந்த முகாம்களில் ஏழை மக்களுக்கு எரிவாயு இணைப்பு வழங்குதல், விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்குதல், குழந்தைகளுக்கு தடுப்பூசி போடுதல் மற்றும் அனைவருக்கும் வங்கி கணக்கு துவக்குதல் போன்ற பிரதம மந்திரியின் திட்டங்கள் எவ்வாறு செயல்படுத்தப்படுகிறது என்றும் மேலும் இத்திட்டங்களில் விடுபட்ட பொதுமக்களை இத்திட்டங்களில் இணைத்து 100 சதவிகிதம் பயனடைய செய்வதே இதன் நோக்கமாகும்.

இதன் ஒரு பகுதியாக இன்று உங்களுடைய கிராமத்தில் வங்கி கணக்கு இல்லாதவர்களுக்கு பிரதம மந்திரியின் ஜன தன் யோஜனா திட்டத்தில் வங்கி கணக்கு துவங்குதல் ஜுவன் ஜோதி பீம யோஜனா திட்டத்தில் 12 வயது முதல் 50 வயது உள்ளவர்களுக்கு ரூ.330 வருடாந்திர பிரீமியத்தில் ரூ.2 லட்சம் மதிப்பில் விபத்து காப்பீடு துவங்கவும் மற்றும் சுரக்ஷா பீம யோஜனா திட்டத்தில் 12 வயது முதல் 70 வயது உள்ளவர்களுக்கு ரூ.12 வருடாந்திர பிரீமியம் செலுத்தி ரூ.2 இலட்சம் மதிப்பில் ஆயுள் காப்பீடு துவங்கவும் ருபே வங்கிக் கணக்கு உள்ளவர்களுக்கு ரூ.1 இலட்சம் வரை காப்பீட்டு வழங்கும் திட்டம் என மொத்தம் ரூ.5 இலட்சம் ஒவ்வொரு குடிமகனும் பயனடைய இத்திட்டம் செயல்படுத்த இந்த சிறப்பு முகாம் ஏற்படுத்தப்பட்டள்ளது. உங்கள் கிராமத்தில் ஏற்கனவே 95 சதவிகிதம் மக்கள் வங்கி கணக்கு உள்ளது. மீதமுள்ள 5 சதவிகிதம் மக்களும் வங்கி கணக்கை துவக்க வேண்டும். மேலும் பிரதம மந்திரியின் ஜுவன் ஜோதி பீம யோஜனா மற்றும் சுரக்ஷா பீம யோஜனா காப்பீட்டு திட்டங்களில் குறைவான நபர்கள் இணைந்துள்ளனர். இத்திட்டத்திலும் அனைவரும் இணைந்திட இச்சிறப்பு முகாம் காலத்தில் பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். மத்திய அரசின் முக்கிய நோக்கம் பொதுமக்க்ள் அனைவரும் வங்கிக் கணக்கை துவக்கி அரசு வழங்கும் அனைத்து மானியங்களும் இடைத்தரகர்களின் இடையூறின்றி நேரடியாக சேர வேண்டும் என்பதே ஆகும்.

காப்பீடு என்பது நமக்கு மட்டுமின்றி நம்முடைய சந்ததியினரின் வாழ்விற்கும் பாதுகாப்பானதாகும். பிரதம மந்திரியின் ஜுவன் ஜோதி பீம யோஜனா திட்டத்தில் 18 வயது முதல் 50 வயது உள்ளவர்களுக்கு ரூ.330 வருடாந்திர பிரிமியம். இந்த தொகை என்பது நாம் ஒரு நாளுக்கு ஒரு ரூபாய் செலுத்துவதாக எண்ணி இதில் கண்டிப்பாக பொதுமக்கள் தங்களை இணைத்துக் கொள்ள வேண்டும். இதனால் எதிர்பாராமல் ஏற்படும் விபத்து மற்றும் மரணத்தின் பொது ரூ.2 இலட்சம் நமக்கோ அல்லது நம்முடைய குடும்பத்தினருக்கோ அவர்களுடைய வங்கி கணக்கில் மத்திய அரசால் நேரடியாக செலுத்தப்படும்.

இதேபோன்று பிரதம மந்திரியின் சுரக்ஷா பீம யோஜனா திட்டத்தில் 18 வயது முதல் 70 வயது உள்ளவர்களுக்கு வெறும் ரூ.12 வருடாந்திர பிரிமியத்தில் ரூ.2 லட்சம் ஆயுள் காப்பீடு 70 வயது முடிந்தவுடன் அவர்களது வங்கி கணக்கில் நேரடியாக செலுத்தப்படும்.

வேலூர் மாவட்டம் முன்னேறிய மாவட்டமாக உள்ளது. இம்மாவட்ட மக்கள் அனைவரும் மத்திய அரசின் இத்திட்டங்களில் முழுமையாக தங்களை இணைத்துக் கொண்டு இந்தியாவிலேயே வேலூர் மாவட்டத்தை 100 சதவிகிதம் வெற்றியடைந்த மாவட்டமாக நிலைநாட்டிட தக்க ஒத்துழைப்பினை நல்கிட வேண்டுமென்று மத்திய அரசின் கண்காணிப்பு அலுவலர் திரு.ஜெயசீலன், (I.D.A.S.) அவர்கள் பேசினார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் பேசியதாவது:-

கிராம சுவராஜ் அபியான் திட்டத்தின் முக்கிய நோக்கம் என்னவென்றால் அரசின் திட்டங்கள் பொதுமக்களை முழுமையாக சென்றடைகிறதா என்பதை கண்காணிப்பதாகும். இதில் முக்கியமாக கவனத்தில் கொள்ள வேண்டியது உங்கள் பகுதிகளில் அரசின் திட்டங்களில் பயனடையாமல் விடுபட்டவர்களை கண்டறிந்து இத்திட்டத்தில் இணைக்க அலுவலர்கள் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். உதாரணமாக இன்று இந்த சிறப்பு கூட்டததில் வங்கி கணக்கு இல்லாதவர்களுக்கு உடனடியாக வங்கி கணக்கு துவங்கப்படும். இதற்கு முன்பெல்லாம் வங்கி கணக்கு துவங்குவது மிகவும் கடினமான ஒன்று. இப்பொழுது அந்நிலைமாறி வங்கி அலுவலர்களே உங்களைத் தேடி வந்து வங்கி கணக்கு உடனடியாக துவக்கி தருகிறார்கள். மத்திய அரசு வழங்கும் எரிவாயு உருளைகளுக்கான மானியம், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை திட்டத்தில் 100 நாள் வேலைக்கான ஊதியத் தொகை, அனைத்தும் இடைத்தரகர்களிடம் வழங்காமல் மக்களின் வங்கி கணக்குகளில் நேரடியாக செலுத்தும் வகையில் சீரான நடைமுறை உருவாக்கப்பட்டுள்ளது. காப்பீட்டு திட்டத்தில் ரூ.12 மற்றும் ரூ.330 பிரிமியம் செலுத்தினால் மத்திய அரசு உங்களுக்கு உரிய ஆயுள் மற்றும் விபத்து காப்பீட்டை வழங்குகிறது. இந்த திட்டத்தில் பயனாளிகளுக்கு உயிரிழப்போ அல்லது விபத்தில் பாதிக்கப்பட்டாலோ அவர்களுக்கான தொகை உடனடியாக அவர்களது வங்கி கணக்கில் செலுத்திவிடுகிறது. உங்களுக்கு பின் உங்கள் குடும்பத்தை காப்பதற்கு இந்த காப்பீட்டு திட்டம் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். வேலூர் மாவட்டத்தில் 74 ஊராட்சிகளில் மத்திய அரசின் திட்டங்கள் பொதுமக்களை சென்றடைய வேண்டும் என்பதற்காக கிராம சுவராஜ் அபியான் இயக்கம் துவங்கப்பட்டள்ளது. விவசாயிகளுக்கு மற்ற மாநிலங்களில் 80 சதவிகிதம் மானியத்தில் நுண்ணீர் பாசன கருவிகள் வழங்கப்பட்டு வருகிறது. ஆனால் தமிழ்நாட்டில் 100 சதவிகிதம் மான்யத்தில் வேளாண் கருவிகள் வழங்கப்படுகிறது.

மாநில அரசு பட்டுபூச்சி வளர்ப்புத் திட்டம் செயல்படுத்தி வருகிறது. அத்திட்டத்தில் பட்டுபூச்சி வளர்ப்பவர்களுக்கு மாதம் ரூ.25 ஆயிரம் வருவாய் கிடைக்கிறது. இதேபோல 777 இடங்களில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.80 ஆயிரம் கடனுதவி அளித்து வெல்மா அங்காடிகள் துவங்கப்படவுள்ளது. இந்த வெல்மா அங்காடிகளில் மகளிர் சுய உதவிக் குழுக்களால் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் விற்பனை செய்யப்படும். இது போன்று தொழில் புரிய அனைவருக்கும் பணம் இன்றியமையாதது. அதற்கு அரசு பல்வேறு கடனுதவிகளை வழங்கி வருகிறது. இக்கடனுதவிகளையோ அல்லது அரசு வழங்கும் மானியத்தையோ பெற வங்கி கணக்கு இன்றியமையாதது. எனவே பொதுமக்கள் அனைவரும் பிரதம மந்திரியின் ஜன்தன் யோஜனா திட்டத்தில் வங்கி கணக்கை துவக்கி மத்திய மாநில அரசுகள் வழங்கும் திட்டங்களை பெற்று பயனடைய வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் பேசினார்கள்.

மேலும் இந்நிகழ்ச்சியில் காவேரிபாக்கம் ஊராட்சி ஒன்றியத்தை சேர்ந்த 5 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வெல்மா அங்காடி துவங்க தலா ரூ.80 ஆயிரம் கடனுதவியும் பிரதம மந்திரியின் விபத்து காப்பீட்டு திட்டத்தின் கீழ் ஓச்சேரி பகுதியில் விபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினரிடம் ரூ.2 இலட்சத்திற்கான காப்பீட்டு பயன் தொகையினையும் மத்திய அரசின் கண்காணிப்பு அலுவலர் திரு.ஜெயசீலன், (I.D.A.S.) அவர்களும் இந்திய அரசின் கால்நடைத் துறை துணை செயலாளர் திரு.தீபக்சீதி அவர்களும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்களும் வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியல் திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) திரு.பெரியசாமி, இந்தியன் வங்கியின் துணை பொது மேலாளர் திரு.சுந்தர்ராஜ், பாரத ஸ்டேட் வங்கி மண்டல மேலாளர் திரு.சாரதி, முன்னோடி வங்கிகளின் மேலாளர் திரு.தாமோதரன், இந்தியன் வங்கி மேலாளர்கள் திரு.சாலை சுந்தரம், திரு.ரவிச்சந்திரன், பாரத ஸ்டேட் வங்கி (கலவை) கிளை மேலாளர் திரு.பாலமுரளி, வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.திருமால், அரசு அலுவலர்கள், வங்கி அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்துக் கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், வேலூர்.